**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Deposition of Witness

Mcop 408/2021

.ம.சா4 இசக்கிமுத்து

| | | |
|---|---|---|
| Name | : | இசக்கிமுத்து |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 25.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கின் 3ம் நபர் ஆவேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

2,3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் தற்சமயம் ஆய்க்குடியில் குடியிருக்கிறேன். நான் கோவிலுக்கு சப்பரம் கட்டும் தொழில் செய்கிறேன். விபத்து நடந்த அன்று ஆய்க்குடியில் இருந்து தென்காசி நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். விபத்து சாய்பாபா கோவில் அருகே நடந்தது என்றால் சரிதான். சாய்பாபா கோவிலுக்கு வடபக்கம் விபத்து ஏற்பட்டது. மனுதாரர் எனக்கு முன்னர் தெரியாது. மனுதாரரும் ஆய்க்குடிகாரர் என்றால் இல்லை. அவருக்கு அகரகட்டு ஆகும். இரண்டு ஊர்களும் அருகருகே உள்ளது. மனுதாரரும் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி அவரது ஊருக்கு சென்று கொண்டிருந்தார். விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் மனுதாரர் வேகமாக வந்து வேன் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து நடந்தபிறகு கூட்டமாக இருந்த பிறகு நான் சென்று பார்த்தேன் என்றால்

சரிதான். நான் சென்று பார்த்தபோது மனுதாரர் நல்ல மனநிலையில் தெளிவாக தான் இருந்தார். அவரை ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனை சென்றோம். நான் உடன் சென்றேன். என்னுடன் ஒரு நபர் வந்தார். அவரது பெயர் தெரியவில்லை. மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமாரா என்றால் தெரியாது. விபத்து குறித்து யார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை. முதல்விசாரணை வாக்கு மூலத்தில் என்னை காவல்துறையினர் விசாரித்தாக கூறியுள்ளேன் என்றால் அது பற்றி சரியாக ஞாபகமில்லை. என்னை காவல்துறையினர் விசாரணை செய்ததற்கு வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் வாக்குமூலம் கொடுத்து கையெழுத்து செய்தேன். காவல்துறையினரிடம் நான் கொடுத்த வாக்கு மூலத்தில் மனுதாரர் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி எதிரே வந்த வேன் மீது மோதி மனுதாரர் தான் விபத்தை ஏற்படுத்தி விட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் என்னிடம் காவல்துறையினர் கையெழுத்து மட்டும் பெற்றுகொண்டார்கள். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரருக்குஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் கொடுத்த வாக்குமூலம் உண்மையானது என்றும், நான் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.